

சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று (27.06.2025), நெடுஞ்சாலைத்துறையின் தலைமைப் பொறியாளர்களின் பணிகள் தொடர்பாக. பொதுப்பணிகள், நெஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆய்வு செய்து சில அறிவுரைகள் வழங்கினார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ் பங்குப் பெற்றார்.

### திருச்சி மாவட்டம் துறையூரில் – ரூ.11 கோடியில் பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகள்!

# ரூ.108 கோடி மதிப்பில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார்!

திருச்சி, ஜூன் 28-

திருச்சி மாவட்டம் துறையூரில் 108 கோடி மதிப்பில் உருவாக்கப்படும் புதிய காவிரி கூட்டு குடிநீர் திட்ட பணிகளும், 11 கோடி மதிப்பில் துறையூர் அண்ணா பேருந்து நிலையத்தை புதுப்பிக்கும் பணிகளும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார்

மேலும், துறையூர் முசிறி ரவுண்டானா முதல் பெரம்பலூர் மெயின் சாலை வரையிலான புறவழிச் சாலைகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் அமைக்கப்பட்ட, உயர் கோபுர, சோலார் மின் விளக்குகள், உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களும் அமைச்சர் கே.என். நேரு அவர்களால் திறந்து வைக்கப் பட்டன.

நிகழ்வின் போது, அமைச்சர் கே.என்.நேரு கூறியிருப்பதாவது:

இன்னும் 30 ஆண்டுகள் "துறையூர் மற்றும் சுற்றுவட்டார மக்களின் நீர்த்தேவையை பூர்த்தி செய்யும் வகையில், காவிரி கூட்டு குடிநீர் திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமையும். இத்துடன், பேருந்து நிலையம் மேம்படுத்தப்படுவதால், பொதுமக்கள் மற்றும் பயணிகளுக்கு ஏற்றவாறு சிறந்த வசதிகள் கிடைக்கும்" எனத் தெரிவித்தார். மேலும்

துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட 20 வது வார்டில், நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள், சுமார் 70 ஆண்டு காலமாக வசித்து வருவதாகவும் அவர்கள் குடியிருப்பு வீட்டிற்கு பட்டா கேட்டு பல ஆண்டுகளாக போராடி வருவதாகவும் அமைச்சரிடம் மனு அளித்தனர் மனுவை பெற்றுக்கொண்ட அமைச்சர் அதற்கான பணிகளை மேற்கொண்டு உடனடியாக பட்டா வழங்க அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட ஆட்சியர் சரவணன், பேரூராட்சி இயக்குனர் பிரதீப் குமார், நகராட்சி ஆணையர் வாசுதேவன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், முசிறி சட்டமன்ற உறுப்பினர் தியாகராஜன், மண்ணச்சநல்லூர் கதிரவன்,நகர் மன்ற தலைவர் செல்வராணி மலர்மன்னன் துணைத் தலைவர் மெடிக்கல் முரளி முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, முத்துச்செல்வம் வீரபத்திரன் சரவணன், அசோகன், நகர் மன்ற உறுப்பினர்கள் வீரமணிகண்டன், சுதாகர், கார்த்திகேயன், இளையராஜா அம்மன் பாபு சுமதிமதியழகன், கல்பனா தனலட்சுமி, முத்துமாங்கனி பிரபு, பொதுக் குழு உறுப்பினர் கிட்டப்பா, விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் சுரேஷ்குமார், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் மகாலிங்கம், மைனர் பாலமுருகன், தக்காளி தங்கராசு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

---

### ஓரணியில் தமிழ்நாட்டை ஒருங்கிணைக்க உடன்பிறப்பே வா!

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக BLA2 ,BDA (டிஜிட்டல் தொழில்நுட்பம்) பயிற்சி கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



கழகத்தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி"ஓரணியில் தமிழ்நாடு" என்ற முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட,திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பாக நிலை முகவர்கள் (BLA-2)மற்றும் பூத் டிஜிட்டல்முகவர் (BDA) பயிற்சிக்கூட்டம் திருச்சி தெற்கு மாவட்ட கிழக்கு சட்டமன்ற தொகுதி, திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி, மணப்பாறை சட்டமன்ற தொகுதி ஆகிய தொகுதிகளுக்கு தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நியமிக்கப்பட்டிருக்கும் OTN AC மற்றும் தொகுதி பார்வையாளர்கள் முன்னிலையில் கிழ்க்கண்ட தேதிகளில் தொகுதி வாரியாக பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக(BLA-2)மற்றும் பூத் டிஜிட்டல்முகவர் (BDA) பயிற்சி நடைபெறவுள்ளது.

| நாள் | தொகுதி | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 28.06.2025 | மணப்பாறை சட்டமன்ற தொகுதி | மணப்பாறை ஒன்றிய அலுவலகம் | மாலை 5:00மணி |
| | திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி | காட்டூர் பெரியார் சிலை பின்புறம் | காலை 8:00மணி |
| 29.06.2025 | கிழக்கு சட்டமன்ற தொகுதி | வி.எண் நகர் மாவட்ட அலுவலகம் | மாலை 06:00மணி |

பயிற்சிக் கூட்டத்தில் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் மட்டுமின்றி BLA2க்களும் கலந்து கொள்ள வேண்டும்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

---

# மும்பையில் கலைஞர் பிறந்த நாள் விழா! உறுப்பினர் உரிமை அட்டைகள் - நல உதவிகள்!

## கவிஞர் சல்மா எம்.பி. வழங்குகிறார்! அலிசேக் மீரான் தலைமையில்!

மும்பை, ஜூன் 28 -

மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா உறுப்பினர் உரிமை அட்டைகள் வழங்குதல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (28.06.2025 சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் ஆரே காலனி, ஆரே காலணி, யூனிட் எண்: 7 அலிசேக் மீரான் தலைமையில் நடைபெறுகிறது. நெல்லை விநாயகர் கோவில் திடலில் வைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் 102 ஆவது பிறந்தநாள் விழா வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் நடைபெறவுள்ள முத்தமிழறி ஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மராத்திய மாநிலத் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் கவிஞர்.சல்மா எம்.பி. சிறப்புரையாற்றுகிறார். பொறுப்புக்குழு உறுப்பினர்கள் சிவக்குமார் சுந்தர்ராஜ் வரவேற்புரையும் முனைவர் வதிலை பிரதாபன் தொடக்கவுரையும் ஆற்றுகிறார்கள்.

தந்தை பெரியார் படத்தை பொறுப்புக் குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசனும், பேரறிஞர் அண்ணா படத்தை ஆரே காலனிக் கிளைக் கழக முன்னோடி கு.தர்ம லிங்கமும், முத்தமிழறிஞர் கலைஞர் படத்தை மாநில இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமாரும் திறந்து வைக்கிறார்கள்.

விழாவில், கழக உறுப்பினர் உரிமை அட்டைகளை கழகத் தோழர்களுக்கு வழங்குவதுடன் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது.

பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி.கிருஷ்ணன், அ.இளங்கோ, வே. சதானந்தன், வெ.அ.ஜெய்னுலாபுதீன், வீரை சோ.பாபு, மெஹபூப் பாஷா, சோ. பா.குமரேசன், சிலுவை தாசன், மற்றும் மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், பாவலர் நெல்லை பைந்தமிழ், முகமதலி ஜின்னா பாண்டு, (ஆரே காலனி கிளை)கவிஞர் வீரமணி, பொய்சர் மூர்த்தி, ஆரே காலனி காங்கிரஸ் செல்லக்கண்ணு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

ஆரே காலனிக் கிளைக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் சேகர் சுப்பையா, கனகராஜ், தமிழ்ச் செல்வன், சுரேஷ் குமார், கட்ட முத்து, முனியன், கோவிந்தராஜ், கிருஷ்ண மூர்த்தி கணேசன், பொன்னுசாமி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக் கிறார்கள்.

க.ஜீவானந்தம், ஜோகேஸ்வரி தமிழினநேசன், தானா அ.பாலமுருகன், Mulund எஸ்.பெருமாள், வாஷிபழனி, முத்து, அ.பாலசுப்ரமணியம், முத்தமிழ் தண்டபாணி பிவண்டி முஸ்டாக் பாய் தானே அ.பாலமுருகன் வாஷி கிளைக் கழகத் தோழர்கள், தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, பசுபதிநாதன்,

சயான் சு.சுடலையாண்டி, பகத் சிங் நகர் ரவி, மொகிதீன், செம்பூர் நம்பி, சீதா கேம்ப் ராஜேந்திரன், ஆழ்வார், திவா வேல்முருகன், அந்தேரி எம்.பொன்மணி, பரமசிவம் (செம்பூர்) பாண்டூப் செல்லத்துரை, உதயசூரியன், ஆனந்தரமேஷ், க.சுந்தர், மாரி, (பாண்டூப் கிளை) செய்யதுபாய், ராமு, (அம்பர்நாத் கிளை) ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இறுதியில் ஆரே காலனிக் கிளைக் கழக முன்னோடி மா.துரைராஜ் நன்றியுரையுடன் விழா நிறைவுறு கிறது. மும்பையின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் கழக உணர்வாளர்கள் யாவரும் விழாவில் கலந்து மகிழும்படி அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

---

### மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்ல பாண்டியன் தலைமை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா!

# பிரபல திரைப்பட பின்னணிப் பாடகர்கள் வழங்கும் 'கலைஞர் 102' பாட்டு மன்றம்!

## அமைச்சர்கள் எஸ். ரகுபதி- சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் நா. இளையராஜா சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜூன் 28-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பிரபல திரைப்பட பின்னணி பாடகர்கள் வழங்கும் கலைஞர் 102 பாட்டு மன்றம் புதுக்கோட்டை கோவில் பட்டி அய்யனார் திடலில் இன்று 28ஆம் தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது.

ஒன்றிய செயலாளர் மு.க ராமகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றுகிறார். மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்ல பாண்டியன் தலைமை வகிக்கிறார்.

முன்னாள் மாநிலங்கவைை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, இதில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்து ராஜா, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் பெரியண்ணன் அரசு, இலக்கிய அணி துணைத் தலைவர் கவிதைப்பித்தன், மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன் பி.டி.அரசகுமார், அரு. வீரமணி, எம். லியாகத்அலி, சுப. சரவணன், புதுக்கோட்டை விஜயா, வி.என்.மணி டாக்டர் அண்ணாமலை, எம்.எஸ். அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ். எஸ்.கருப்பையா, க. மதியழகன், பெ. ராஜேஸ்வரி, கீரை.தமிழ் ராஜா, சு.சண்முகம், தவ. பாஞ்சாலன், டாக்டர் அஞ்சுகம் பூபதி, கார்த்திகேயன் வேல்சாமி, டாக்டர் சி. குறிஞ்சி வாணன், பூங்குடி எம் சிவக்குமார், ஒன்றிய மாநகர பேரூர் செயலாளர்கள், கே.எஸ்.சந்திரன், என். சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து, வெ. முத்துகிருஷ்ணன், மா.தமிழ் ஐயா, ஓ.எஸ்.வெங்கடாசலம், அ.இளங்குமரன், சி. சண்முகம், கே.பி.ஐயப்பன், ஆர்.சாமிநாதன், வே. ராஜேஷ், செ.கணேஷ், வை.விஜயகுமார், உ.முருகேசன், அண்ணாதுரை, முகமதுரிஷா, அ.ரெத்தினம், பா.ரங்கராஜன், எம்.மணிவேலன், முத்தழகு, பழனிவேலு, சேட்டு, என்கிற ஷாஜகான், ராமலிங்கம், ஜேம்ஸ், ராஜதுரை, அறிவுடை நம்பி முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட கழக செயலாளர், கனிம வளங்கள் சுரங்க துறை அமைச்சர் எஸ். ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்ய நாதன், தாட்கோ தலைவர் நா. இளையராஜா பாட்டு மன்றத்தை துவங்கி வைத்து சிறப்புரையாற்றுகின்றனர்.

திரைப்பட பின்னணி இசை பாடகர்கள் கலைமாமணி மாலதி, முகேஷ், செந்தில்தாஸ், பங்கேற்கும் டாக்டர் கலைஞர் தொடர்புடைய திரைப்படப் பாடல்கள் மற்றும் இன்னிசை பாடல்கள் கலைஞர் 102 பாட்டு மன்றம் நிகழ்ச்சியை நடத்துகின்றனர். நிர்வாகிகள் தென்னலூர் எம். பழனியப்பன், என்.சாத்தையா, ராசு, சந்தோஷ், எம்.செந்தில்குமார், செல்லதுரை, வி.ஆர்.வி.சித்ரா, ரங்கராஜ், மு.பி.மணி, வைகோ ராஜன், மு.கலியமூர்த்தி, திருஞானசம்பந்தம், எம். எம்.பாலு, க.நைனா முகமது, ராமசெல்வராஜ், ஜெகநாதன், முத்துக்குமார், பாலகிருஷ்ணன், ஜெயலட்சுமி, தமிழ்ச்செல்வன், பாண்டி செல்வி போஸ், மணி, சின்னையா, மாலா, ராஜேந்திர துரை,லதா இளங்குமரன், கல்யாணி மாரிமுத்து, சித்ரா ரவிச்சந்திரன், செல்வம் ராஜேஸ்வரி, செந்தில்குமார், சாந்தி தங்க சிங்கம், கை.பழனிச்சாமி, ஜெயா மீரா ரவிக்குமார், சகுந்தலா வைரவன், இம்தியாஸ், செந்தில் ராஜா, நைனா முகமது, அணிகளின் அமைப்பாளர்கள் உரக்கடை கருப்பையா, மஜீத் முபாரக், சூசை ராஜ், கே.எஸ்.ச .இளைய சூரியன், கணபதி, சுப்பையா, மு.க.முத்து க்கருப்பன், பிரபா, செந்தாமரை பாலு, டி.எம்.ஆர். ராமமூர்த்தி, பாரிவள்ளல், பாலு, மணிவண்ணன், கவிவேந்தன், அரங்கநாயகம், ஜெய் ஸ்டாலின், ராமசாமி, சிவக்குமார், முகமது அன்சாரி, பாசித், கலைஞர் கருணாநிதி, இளைஞரணி முத்துசாமி, அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் ராமசாமி, அசரப்அலி, மணிமொழி மனோகரன், சுப்பிரமணியன், காதர்கனி, சுமோ பாலு, வெற்றிச்செல்வன், ஆதிமூலம், ரவிச்சந்திரன், ராஜேந்திரசோழன், மரியஎட்வின், சுந்தர் ராஜன், பரிமளம்,

ராஜாங்கம், மகேந்திரன், மூர்த்தி, செந்தில்குமார், பாலசுப்பிரமணியன், சின்னையா, அமானுல்லா, அன்பழகன், குழந்தை, ஹரிஹரன், கோவிந்தன், உதயசூரியன், பிரபாகர தாஸ், நாகேந்திரன், வெங்கடேசன், தரணி ரமேஷ், சந்திரசேகர், தங்கமணி, மகேந்திரன், ராஜூவ் உத்ராபதி, விஸ்வநாதன், ஜெனி இளங்கோவன், அரசு வழக்கறிஞர்கள் செந்தில்குமார், முருகேசன், அறிவுடை நம்பி, ரமேஷ் ,எஸ் ரமேஷ், குமார்,சேகர், தவமணி மற்றும் கழகத்தினர் பங்கேற்கின்றனர். மாமன்ற உறுப்பினர், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் செ. அடைக்கலம் நன்றியுரை கூறுகிறார்.



ஆம்பூர் மேற்கு நகர தி.மு.க இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளையோட்டி தெருமுனைகக்கூட்டம் நகர மன்ற துணைத் தலைவர், எம்.ஆர்.ஆறுமுகம் தலைமையில் சான்றோர்குப்பத்திலும், கங்காபுரம் மேம்பாலம் அருகிலும் நடைபெற்றது. வரவேற்புரை எம். சரண்ராஜ் ஆற்றினார். முன்னிலை : ஆம்பூர் கிழக்கு நகர பொறுப்பாளர் எம்.ஏ.ஆர். ஷபீர் அஹமது, எம்.சி, மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், நகர மன்ற தலைவர் பி. ஏஜாஸ் அகமது, ஆர்.டி.எஸ். சாமுவேல் செல்லபாண்டியன், எஸ். தேவராஜ், எஸ். ரபிக் அகமது, ஏ. தாஸ், ஜெயபாரதி அறிவழகன், ஜி. வில்வநாதன், வி.நசீர் அகமது, எம். நரேஷ், ஆர்.டி.எஸ்.குமார், எம். சுதாகர், எஸ். சௌந்தர்ராஜன், ஆர்.எஸ். வசந்த்ராஜ், சத்தியராஜ், அரவிந்தன், கௌதம், முபாரக் பாஷா, வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர். அ.செ.வில்வநாதன், தலைமை கழக பேச்சாளர் கந்திலி கரிகாலன், இரா.தமிழ்வாணன், வடிவேல், பாபு ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். கோபி நன்றி கூறினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழ. சுப்பையா
### ஜூன் 28 (2022)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கிளைச் செயலாளர், ஊராட்சி செயலாளர், இரண்டு முறை அறந்தாங்கி ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட இலக்கிய அணி பொருளாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**இடையாத்தூர் ஊராட்சி மன்ற தலைவராகவும், ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**